பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

# நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 15] சென்னை: பங்குனி 27 (9-4—58) செவ்வாய் ★ வெளியூர்: பங்குனி 28 (10—4—68) புதன் [இதழ்: 248

## எல்லைக் கற்களிலும் 'தமிழகம்'!

வேலூர், ஏப். 9—

தமிழக எல்லைகளைக் குறிக்கும் கற்களில் உள்ள 'சென்னை ராஜ்யம்' என்ற பெயரைத் 'தமிழகம்' என்று மாற்றிவிடும்படி மாநில அரசு, மாவட்ட ஆட்சித் தலைவர்கட்கும் ஆணைபிறப்பித்துள்ளது.

## மோரிஸ் தமிழர்கட்குப் படிப்புதவி

### தமிழக அரசு அளிக்கிறது

சென்னை, ஏப். 9—

மோரிஸ் நாட்டைச் சார்ந்த தமிழ் மாணவர்களுக்காக இரு உதவித் தொகையை (ஸ்காலர்ஷிப்) ஏற்படுத்தத் தமிழக அரசு முடிவு செய்திருக்கிறது.

கல்லூரியில் சேர்ந்து படிக்கும் மாணவர்களுக்கு இந்த உதவித் தொகை அளிக்கப்படும்.

1968—69-ம் ஆண்டு முதல் மோரீஸ் நாட்டைச் சார்ந்த தேர்ந்தெடுக்கப்படும் இரு தமிழ் மாணவர்களுக்குப் புகுமுக வகுப்புப் படிப்பு அல்லது மூன்ருண்டுப் பட்டப் படிப்பில் முதலாவது ஆண்டு வகுப்புப் படிப்புக்கு உதவித் தொகை அளிக்கப்படும்.

உதவித் தொகையாக மாதம் ரூ. 150 வீதம் ஓராண்டுக் காலத்திற்கு அளிக்கப்படும். இவர்களுக்குக் கல்விக் கட்டணம் கிடையாது.

உதவித் தொகைக்கான விண்ணப்பங்களை சென்னையில் உள்ள கல்வித்துறைச் செயலாளருக்கு மோரிஸ் நாட்டில் உள்ள இந்தியத் தூதுவர்மூலம் மே 31-ம் நாளுக்கு முன்னதாக அனுப்பவேண்டும்.

# இந்தியின் இயலாமை—டெல்லிக்குப் புரிகிறது!

## மசோதாக்கள் ஆங்கிலத்திலேயே உருவாக்கப்படும்

### இந்தி மாநிலங்களிலேயே இந்தியில் மசோதா தயாரிக்க முடியவில்லையாம்

புதுடில்லி, ஏப். 9—

நாடாளுமன்றத்தில், 'ஆங்கிலத்திலும் இந்தி மொழியிலும் ஒரே நேரத்தில் மத்திய அரசின் மசோதாக்களை தாக்கல் செய்ய உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும்' என்ற திட்டத்தை மத்திய அரசு, 'செயல்படுத்த வேண்டாம்' என்று முடிவு செய்திருக்கிறது.

தற்போது நாடாளுமன்றத்தில் ஆங்கிலத்தில் மட்டுமே மத்திய அரசின் மசோதாக்கள் தாக்கல் செய்யப்படுகின்றன; இந்தி மொழியிலும் மசோதாக்களை வெளியிட வேண்டுமானுல் அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டியிருக்கும்.

'மொழிப் பிரச்சினை தீர்ந்துவிட்டது' என்று மத்திய அரசு எண்ணிக்கொண்டிருக்கும் இந்நேரத்தில், ஆட்சி மொழிச் சட்டத்தை மீண்டும் திருத்த முற்படுவது, இப்பிரச்சினையை மீண்டும் விவாதத்திற்குரிய ஒன்ருகிவிடும் என்று மத்திய அரசு கருதுவதாகத் தெரிகிறது.

மசோதாக்களை மொழிபெயர்ப்பதற்குத் தேவையான அதிகாரிகள் இல்லாதது, இத்திட்டத்தைச் செயல்படுத்த மத்திய அரசு முன்வராததற்கு மற்ருெரு காரணமாகும்.

இந்தி ஆட்சிமொழியாக இருக்கும் மாநிலங்களில்கூட, மசோதாக்கள் ஆங்கிலத்தில் தயாரிக்கப்பட்ட பின்னர்தான் இந்தியில் மொழிபெயர்க்கப்படுகின்றன; இதற்குத் தேவையான அதிகாரிகளை நியமிக்க மத்திய அரசு தற்போது எண்ணிக் கொண்டிருப்பதாகவும், இதனை நிறைவேற்றக் கொஞ்சம் காலம் ஆகும் என்றும் கருதப்படுகிறது.

இந்தி அச்சுக்கூடங்கள் தேவையான அளவு இல்லாத காரணத்தினுல், இந்தி மொழியைப் படிப்படியாகக்கொண்டுவர அரசு அச்சுக்கூடங்களை அதிக அளவில் நிறுவவும் திட்டமிடப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

இந்தியில் எல்லாச் சட்டங்களையும் மொழிபெயர்க்க நினைத்திருப்பது இன்னுமொரு காரணமாகும்.

இந்தி மொழிபெயர்ப்பு வேலையில் எதிர்பார்த்த அளவு முன்னேற்றம் இல்லை.

'இந்தியில் மசோதாக்களைக் கொண்டுவருவதற்கு முன்பு எல்லாச் சட்டங்களையும் இந்தி மொழியில் கொண்டுவர வேண்டும்' என்று மத்திய அரசு கருதியிருப்பதாகவும் தெரிகிறது.

## பஞ்சாபில் காங்கிரசுக்குப் பலத்த அடி!

### மேலவைத் தேர்தலில் 4 இடங்களைக் கோட்டைவிட்டது

### ஆட்சியிலிருக்கும் கட்சி பதவி விலகுமா?

சண்டிகார், ஏப். 8—

பஞ்சாப் சட்டமன்ற மேலவைக்கு நடைபெற்ற உள்ளாட்சி மன்றத் தொகுதித் தேர்தலில் காங்கிரசுக் கட்சி படுதோல்வி அடைந்துவிட்டிருக்கிறது.

நடைபெற்ற தேர்தலில் 5 தொகுதிகளில் 4 இடங்களைக் காங்கிரசுக் கட்சி இழந்து, ஒரே இடத்தில் மட்டுமே வெற்றிபெற முடிந்திருக்கிறது!

இந்த நான்கு இடங்களையும் கைப்பற்றிக்கொண்ட கூட்டு முன்னணியினருக்கு, 40 உறுப்பினர்களைக் கொண்ட மேலவையில் தற்பொழுது 10 இடங்கள் இருக்கின்றன.

தேர்தல் முடிவுகள், காங்கிரசுக் கட்சிக்கும் — காங்கிரசின் கைப்பாவையாக ஆட்சி செய்துகொண்டிருக்கும் ஜனதா கட்சிக்கும் பலத்த அதிர்ச்சியைக் கொடுத்திருக்கிறது.

தோல்வியடைந்த காங்கிரசு வேட்பாளர்களை, காங்கிரசுக்காரர்களே சில இடங்களில் தோல்வியடையச் செய்திருக்கின்றனர் என்றும், இது குறித்து மாநிலக் காங்கிரசுக் கட்சி ஒரு விசாரணையை மேற்கொள்ளவிருப்பதாகவும் காங்கிரசுத் தலைவர்கள் கூறினர்.

முதலமைச்சர் இலட்சுமண சிங் கில், 'காங்கிரசுக் கட்சியினரின் ஒற்றுமையின்மையே இத்தோல்விக்குக் காரணம்' என்று பத்திரிகையாளர்களிடம் கூறினுர்.

தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டதும், எதிர்க் கட்சித் தலைவர் குர்ணும் சிங் கூறியதாவது:—

"காங்கிரசுக் கட்சியின் உதவியுடன் ஆட்சி செய்துகொண்டிருக்கும் சிறுபான்மைக் கட்சியான ஜனதா கட்சி குறித்து, மக்கள் தங்கள் கருத்தைத் தெரிவித்துவிட்டனர்; ஆகையால், மக்களை மதிக்க இலட்சுமண சிங் கில் உடனடியாகப் பதவி விலக வேண்டும்.

"முதலமைச்சரும், அவருடைய நண்பர்களும், இத்தேர்தலில்

(4-ம் பக்கம் பார்க்க)

## புதுவை அரசின் சனநாயக விரோதப் போக்கு

### கள்ளுக் கடைகள் ஏலத்தில் ஊழல்—

### பொது விசாரணை நடத்த எதிர்க் கட்சி வற்புறுத்தல்

புதுவை, ஏப். 8—

புதுவை மாநிலச் சட்டமன்றம் இன்று நாள் குறிப்பிடாமல் ஒத்திவைக்கப்பட்டது.

ஒத்திவைக்கப்படுவதற்கு முன்னுல், நிதியமைச்சர் திரு. காங்கேயன், நிதி ஒதுக்கீட்டு மசோதாவைத் தாக்கல் செய்தபோது, சூடான வாக்குவாதங்கள் நடைபெற்றன.

விவாதத்தைத் தொடங்கிவைத்துப் பேசிய எதிர்க் கட்சி (ஐக்கிய முன்னணி) உறுப்பினர் திரு. குருசாமி,

"அரசினருக்கு உறுதியான கொள்கை இல்லை; மத்திய அரசின் ஒலிபெருக்கியாகவே அது இருந்துவருகிறது; 'புதுவைக்காகத் தனி மானியம் வேண்டும்' என்று தட்டிக் கேட்கத் துணிவில்லை"

என்று குற்றஞ்சாட்டினுர்.

அவர் மேலும் பேசுகையில், 'கட்சி நலனுக்கே அரசு இயங்குகிறது' என்று கூறினுர்.

"கள்ளுக்கடை ஏலம் விடப்பட்டதில் நடைபெற்றுள்ள ஊழல்கள் பற்றிப் பகிரங்க விசாரணை நடத்த அரசு அஞ்சுகிறது" என்றும் அவர் குற்றஞ்சாட்டினுர்.

"மொழிக் கொள்கையைச் செயல்படுத்த அரசு தவறிவிட்டது" என்றும் குற்றஞ்சாட்டினுர்.

எதிர்க் கட்சி உறுப்பினரான டாக்டர் என். இரங்கநாதன் பேசுகையில், 'அரசுக்கு உறுதியான கொள்கை இல்லை; மூன்ருண்டுக் காலத்துக்குள் மூன்று முறை அமைச்சரவை மாற்றப்பட்டிருக்கிறது' எனக் கூறினுர்.

திரு. வி. சுப்பையா பேசுகையில், 'மாகி மரவள்ளிக்கிழங்கு வியாபாரத்தில் நடந்த ஊழலில் ஓர் அமைச்சரும் ஈடுபட்டிருக்கிருர்' எனக் குற்றஞ்சாட்டினுர்; 'அது பற்றி ஓர் பகிரங்க விசாரணை நடத்தவேண்டும்' என்ருர்; 'நெட்டப்பாக்கம் கள்ளுக்கடை ஏலத்தில் நடைபெற்ற ஊழல் குறித்தும் விசாரணை நடத்தவேண்டும்' என்ருர்.

"முந்திய காங்கிரசு அமைச்சரவை விட்டகுறை தொட்டகுறைகளையெல்லாம் ஆராய்ந்து அறிய இந்த அமைச்சரவைக்கு சிறிது

(4-ம் பக்கம் பார்க்க)

## கழக வேட்பாளர் வெற்றி

### மேலவைத் தேர்தல் முடிவுகள்

சென்னை, ஏப். 9—

சென்னை—செங்கற்பட்டு ஆசிரியர் தொகுதியில் போட்டியிட்ட கழக வேட்பாளர் பேராசிரியர் க. அறிவழகன் வெற்றி பெற்ருர்.

தோழர் அறிவழகன் 1,423 வாக்குகள் அதிகம் பெற்ருர். காங்கிரசு சார்பில் எதிர்த்துப் போட்டியிட்டவர் 350 வாக்குகளே பெற்ருர். மற்ருெரு வேட்பாளரான பார்த்தசாரதி 434 வாக்குகளும், மற்ருெரு வேட்பாளர் ஆதிமூலம் 73 வாக்குகளும் பெற்றனர்.

தமிழக மேலவைக்கு, தஞ்சை ஊராட்சி மன்றத் தொகுதியில் போட்டியிட்ட கழக வேட்பாளர் கோ. சி. மணி அதிக வாக்குகள் பெற்று வெற்றியடைந்தார்.

சேலம்—தர்மபுரி உள்ளாட்சித் தொகுதியில் போட்டியிட்ட கழக வேட்பாளர் ப. தா. முத்து வெற்றிபெற்றுள்ளார்.

மதுரை—இராமநாதபுரம் உள்ளாட்சித் தொகுதியில் போட்டியிட்ட கழக வேட்பாளர் பி. திருஞானமும் வெற்றி பெற்ருர்.

# நாட்டுக்கு நற்பயன் தரவிருக்கும் அண்ணாவின் உலகப் பயணம்

அறிஞர் அண்ணா அவர்கள் மேற்கொள்ளவிருக்கும் மேலைநாட்டுச் சுற்றுப்பயணத்தின் சிறப்புக் குறித்தும், இப்பயணத்தின் மூலம் நாட்டுக்குக் கிடைக்கவிருக்கும் நற்பயன் குறித்தும் 'மெயில்' இதழின் டெல்லி நிருபர் 'பேர்ட்டினைக்ஸ்' எழுதியுள்ள கட்டுரையின் மொழிபெயர்ப்பு வருமாறு :—

'காங்கிரசு அல்லாத முதலமைச்சர்களுள், தமிழக முதல்வர் திரு. அண்ணாதுரை அவர்களே தமது பதவிக் காலத்தில் மேற்கு நாடுகளுக்குச் செல்லும் முதலாமவர்' என்று சொல்லலாம்; அவர் ஏப்ரல் 15-ம் நாள் சென்னையிலிருந்து புறப்படவிருக்கிறார்.

இதை, 'உலகத்தைச் சுற்றி ஒரு சூருவளிப் பயணம்' எனலாம். முதலில் அவர் நேராக வாஷிங்டன் செல்கிறார். அமெரிக்காவில் அவர் சுருக்கமாகத் தமது பயணத்தை முடித்துக் கொண்டு திரும்புகையில் ஜப்பான் நாட்டுக்கு வந்து, பின்னர் அங்கிருந்து தென் கிழக்கு ஆசிய நாடுகள் பலவற்றுக்கும் செல்கிறார்.

அவரது சுற்றுப்பயணச் செய்தி வெளியானதும், இந்தியத் தலைநகரில் ஓரளவுக்கு மனக் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. ஏதாவது ஒரு காரணத்தையொட்டி, தி.மு. கழகம் அல்லது வாஷிங்டன் பற்றிய தகவல்களே மனத்தைத் தொடுவதாக உள்ளன.

இந்தப் பரபரப்பு ஏனெனில், இந்த இரண்டு விஷயங்களும் தர்மசங்கடமானவையாகப் புதுடில்லிக்குத் தோன்றுகின்றன.

முதலாவதானது— அதாவது தி.மு.க., மத்திய ஆட்சியின் இடையூறுகளை எண்ணி, அதிகாரப் பரப்புக்கு எல்லை கட்டிக்கொண்டாக வேண்டிய அளவுக்குத் தென்னகத்தின் அரசியல் நிலைமையை மாற்றிவிட்டுள்ளது!

அடுத்ததான வாஷிங்டனைப் பொறுத்து, அதை வெல்லவும் முடியாது—ஒதுக்கித் தள்ளவும் இயலாது!

**இந்த நிலைமையைப் பொறுத்து, மத்தியத் தலைமை செய்யக் கூடியது ஏதுமில்லை; இருந்த போதிலும், 'மத்திய அரசுத் தலைவர்கள், திரு. அண்ணாதுரையின் மேலைநாட்டுப் பயணம் பற்றிப் பரபரப்பான ஆவலுடன் கவனிக்கமாட்டார்கள்' என யாரும் எதிர்பார்க்கவும் முடியாது!**

**எனினும், புதுடில்லி ஆட்சிமிலுள்ள அரசியல் தலைவர்களிடையே—திரு. அண்ணாதுரை பிரபலமானவர் என்பதால்—அவர்கள் உண்மையான மகிழ்ச்சியுடன் அவருக்கு நல்வாழ்த்துக் கூறி வழியனுப்புவர் என்பதும், அவரது பயணம் மகிழ்ச்சியுடனும் பயனுள்ளதாகவும் அமையத் தேவைப்படும் உதவி அனைத்தையும்கூட அவர்கள் தருவர் என்பதும் நிச்சயம்!**

**திரு. அண்ணாதுரை, உலகப் பயணத்தையொட்டி புதுடில்லிக்குச் செல்லாவிட்டாலும், தொலைபேசி வாயிலாக அவர் தலைமையமைச்சர் இந்திராவுடன் கருத்துப் பரிமாற்றம் செய்துகொண்டிருக்கிறார்!**

அமெரிக்கர்கள், பொதுவாக அதிகமாக வினா எழுப்பக்கூடியவர்களாதலால், இந்தியாவில் அதிகமாகப் பேசப்பட்டுவரும் அண்ணாதுரை போன்ற புகழும் திறமையும்மிக்க பிரமுகரிடம், எண்ணற்ற கேள்விக் கணைகளைத் தொடுப்பர் என்பது எதிர்பார்க்கும் ஒன்றுதான்!

**அமெரிக்காவில் எங்கெல்லாம் அவர் செல்கிறாரோ—அங்கெல்லாம் அவர், மக்களைச் சந்திக்க வேண்டிய ஏற்பாடுகள் அனைத்தும் செய்யப்படுவதாக வெளிநாட்டுப் பிரமுகர்களைக் கவனிக்கும் பணியை மேற்கொண்டிருக்கும் அதிகாரிகளிடமிருந்து குறிப்பாகத் தெரிந்துகொள்ள முடிகிறது!**

அமெரிக்க அரசின் அழைப்பின் பேரிலும், அமெரிக்கப் பல்கலைக்கழகங்களின் அழைப்பின்பேரிலும் அமெரிக்கா செல்லும் தமிழகத் தலைவர் பெறப்போவது, தனிப்பட்ட கௌரவமாகும்.

அண்ணாதுரையும், தமக்கே உரிய ஆர்வத்துடன் அங்கிருந்து பல உண்மைகளைத் தெரிந்துகொண்டு தாயகம் திரும்புவார் என்று எதிர்பார்க்கலாம்!

அமெரிக்கப் பயணம்—அவரது நோக்கின்படி—பல விஷயங்களில் அவருக்குத் தனி அக்கறை உள்ளதாக இருக்கும்!

இன்று அவர் ஒரு நிர்வாகி; பொருளாதார—சமூகக் கொள்கைகளின் அமைப்பாளர்; இவைபோன்ற துறைகளில் அமெரிக்க நாட்டில் பெரும் சோதனைகள் நிகழ்ந்துள்ளன; இவை, அவருடைய எண்ணத்தை ஈர்க்கச் செய்யும்!

ஜப்பானில் ஏற்பட்டுள்ள தொழில்மய அமைப்பு, அவரைப் பெரும் ஆர்வம்கொள்ளச் செய்யும்!

**தென்னாட்டில் மாறிவரும் அரசியல் அமைப்பில், அமெரிக்கர் மிகுந்த அக்கறை காட்டுகின்றனர்!**

**தி. மு. க தலைவரின் வருகையை மிகுந்த ஆவலுடன் அவர்கள் எதிர்பார்ப்பதில் இந்த விஷயமே அடிநீரோட்டமாகத் தெரிகிறது!**

**ஆனால் தி. மு. க. ஆட்சிக்கு வருவதற்கு வெகு காலத்திற்கு முன்னரே—அதாவது அதன் இளமை காலந்தொட்டே—அமெரிக்க அறிஞர்களிடையே தி. மு. க.-வின் எதிர்காலம் பற்றி மிகுந்த ஆர்வம் இருந்து வந்திருக்கிறது!**

**10 ஆண்டுகளுக்கு முன்னர் ஓர் அமெரிக்கப் பேராசிரியர், தென்னாட்டுக்கும்—இலங்கைக்கும் வந்திருந்து, தேர்தலில், மொழி—அரசியல் பங்குகளைப் பற்றி ஆராய்ச்சி செய்து திரும்பினார்.**

**இன்று தென்னாட்டில் தி. மு. க. ஆட்சிக்கு வந்துள்ளது; 1957-ல் தேர்தல் களத்தில் குதித்த தி. மு. க., பிரம்மாண்டமான வளர்ச்சி பெற்று வளர்ந்து வலுப்பெற்று 1967-ல் ஆட்சியைக் கைப்பற்றியுள்ளது!**

'தென்னாட்டில் அண்ணாதுரை பெறும் வெற்றி, இந்தியத் துணைக்கண்டத்துக்கு முக்கியத்துவமுள்ளதாக விளங்கும்' என்று அமெரிக்காவிலுள்ள அரசியல் மாணவர்கள் யூகிக்கிறார்கள்!

இதையே வேறு வகையில் சொன்னால், 'ஒரு பெரும் சக்தியாக உருப்பெற்று வரும் மொழி — அரசியல் — மற்றும் வட்டார அரசியலின் விளைவு எப்படிப்பட்டதாக இருக்கும்' என்ற வினாதான் எழுப்பப்படுகிறது.

ஏற்கனவே, புதுடில்லியில் பெரும்பாலும், ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், ஒரே அமைப்புக் கொண்ட — ஒன்றுக்கொன்று தனிப் பிரச்சினைகள் கொண்ட ஒரு பகுதியாகத் தென் மாநிலங்களை ஒருமைப்படுத்துவதற்கான எண்ணம் அதிகரித்து வருகிறது.

'தென் தீபகற்பம், ஒரேமாதிரியான பொதுப் பிரச்சினைகளும், பொது அக்கறையும், பொதுப் பாதுகாப்பும் கொண்டுள்ள பகுதியாகும்'— இக் கருத்தை, அண்ணாதுரையும் பல சந்தர்ப்பங்களில் எடுத்துச் சொல்லியிருக்கிறார்.

பாதுகாப்பு ஒரு தேசிய விவகாரமானதால், தென்னாடு தனியாகப் பாதுகாப்பு வைத்திருக்க முடியாது! உண்மையில் அந்த எண்ணமே தி.மு.க-வைப் பிரிவினைக் கொள்கையைக் கைவிடும்படிச் செய்தது!

எனவே, நாட்டுத் தலைமையின் நன்மைக்காக அவர்களின் கருத்து என்ன என்பதை அண்ணாதுரை தெரிந்துகொண்டு திரும்புவார் எனலாம்.

அவர் திரும்பிவந்ததும், தேசிய அரசாங்கத்திற்கு அக்கறையுள்ள விஷயங்கள் பற்றிய தமது மேலைநாட்டு அனுபவங்களை, தலைமையமைச்சரிடம் இரகசிய அறிக்கையாகக் கொடுப்பாரானால், அது,சுவையான ஒன்றாக இருக்கும்!

தமிழக முதல்வர், தமிழகத்தில் பெரிய மேம்பாட்டுக்குப் புதிய தொழில்களை ஏற்படுத்துவதற்கான வாய்ப்புகளுடன் திரும்பி வருவார் என எதிர்பார்க்கலாம்!

தமிழகத் தலைவரின் மேலைநாட்டுச் சுற்றுப்பயணத்தில், மற்றொரு நோக்கமும் உள்ளது;

(3-ம் பக்கம் பார்க்க)

## அண்ணாவை அழைத்த யேல்!

முத்து

இதுவரை அமெரிக்கர் அல்லாத் வேறு யாருக்குமே கிடைக்காத பெரும்பேறு தமிழ் மண்ணின் தலைமகனான பேரறிஞர் அண்ணா அவர்களுக்குக் கிடைத்திருக்கிறது. ஒரு தலைமுறையையே மாற்றி அமைத்த அவரது வியக்கத்தக்க மேதைவிசாலத்தைப் புரிந்துகொண்டு அவரைப் பெருமைப்படுத்த முன்வந்திருக்கிறது, அமெரிக்க நாட்டின் 'யேல்' பல்கலைக் கழகம்.

அண்மைக்காலம்வரையில் இங்கே அமெரிக்கத் தூதுவராய் இருந்து விலகிய 'கால்பிரெய்த்' வரை பல பேரறிஞர்களை உருவாக்கித் தந்த—உலகின் தலையாய பல்கலைக் கழகங்களின் பட்டியலில் இடம்பெற்ற—இந்த 'யேல்' பல்கலைக் கழகம்,

**" தமிழகத்தின் கைத்தறித் துணியால் உயிர் பெற்று வளர்ந்தது " என்றால் நீங்கள் திகைப்பீர்கள் !**

இத்தகைய நேரங்களில்தான் நம்பமுடியாத அளவுக்கு உண்மை, அதிசயம்மிக்கதாய் இருக்கிறது.

அமெரிக்க ஐக்கிய நாட்டின் 'கனெக்டிக்கட்' மாநிலத்தில் உள்ள 'நியுஹேவன்' என்னும் இடத்தில், கி. பி. 1701-ல் தோன்றிய 'சேப்ரூக்' கல்லூரியின் விரிவுதான் இன்றைய 'யேல்' பல்கலைக் கழகம்!

திராவிட இந்தியாவை உள்ளபடி உணருவதிலும, திராவிடக் கலாசாரத்தைப் பரப்புவதிலும் முன்னணியில் நிற்கும் இந்தப் பல்கலைக் கழகம், கல்லூரி நிலையில் இருந்த நாளில் மூடப்பட வேண்டிய அளவுக்குப் பொருளாதார முடை ஏற்பட்டது.

1705-ல் தொடங்கினாலும், சுவர்ண பூமியான அமெரிக்காவின் இந்தக் கல்லூரிக்கு 1716 வரை சொந்தக் கட்டடம் அமையவில்லை; எனவே, கல்லூரி நிர்வாகிகள், பேரறிஞரும் சமயத் துறைஞருமான காட்டன் மாதர் (Cotton Mather) என்பாரை அணுகி, 'எப்படியாவது பணம் உதவி செய்தாக வேண்டும்' எனக் கோரினர். அவர் அந்நாளில், இந்தியாவில்—சென்னையில் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆளுநராக இருந்த திரு. 'எலிஹு யேல்' என்ற தம் நண்பருக்குக் கடிதம் எழுதினார்—உதவி கோரி!

### கைத்தறித் துணி

உடனே எலிஹு யேல், மூன்று பேல்கள் தமிழகத்துக் கைத்தறித் துணியையும், தம்மிடமிருந்த சில அரிய நூல்களையும், முதலாம் ஜார்ஜ் மன்னரின் உருவப் படம் ஒன்றையும் தம் பரிசாக 'சேப்ரூக்' கல்லூரிக்கு அனுப்பி வைத்தார்.

அந்த நாளில் இந்தப் பொருள்களை 'பாஸ்டன்' நகரில் ஏலம் விட்டதில் 562 டாலர் கிடைத்தது; அந்த நாளில் தனி மனிதர் ஒருவர் தந்த மிகப் பெரிய தொகை அது; எனவேதான், அதற்குக் காரணரான 'எலிஹு யேல்' பேராலே 'சேப்ரூக்' கல்லூரியை 'யேல்' பல்கலைக் கழகமாக அமைத்தார்கள்.

எனவே, சென்னையில் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆளுநராக இருந்த எலிஹு யேல் அனுப்பிய தமிழகத்துக் கைத்தறித் துணிக்கு, இந்தப் பல்கலைக் கழகத்தின் வளர்ச்சியில் பெரும் பங்கு உண்டு.

இன்னொரு சந்தேகம் ஏற்படலாம்; கிழக்கிந்தியக் கம்பெனி என்ற பிரிட்டிஷ் கம்பெனிக்காரர், அமெரிக்காவின் பல்கலைக் கழகத்துக்குப் பணம் உதவுவானேன்? நியாயமான கேள்வி; காரணம் இதுதான் :—

இந்த எலிஹு யேல், 'பாஸ்டன் டீபார்ட்டி' என்று வரலாற்றில் குறிக்கப்பெறும் விடுதலை வேள்வி நடந்த பாஸ்டன் நகரில் 1949-ல் பிறந்தார்; சின்னஞ் சிறுவனாகவே அவர் இங்கிலாந்து சென்றுவிட்டார்; பின்னர் அங்கே இருந்து கிழக்கிந்தியக் கம்பெனியில் ஆண்டுக்குப் பத்துப் பவுன் சம்பளத்தில் எழுத்தராகப் பணி செய்யச் சென்னை வந்தார். பதினைந்து ஆண்டு கடுமையான உழைப்பின் பலனாய் சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையின் ஆளுநராகவே பொறுப்பு அளிக்கப்பட்டார். 1687—1692 வரையும் அவர் கவர்னராக இருந்தார்.

சென்னையில் இருந்தபோது அவர், கிழக்கிந்தியக் கம்பெனியில் பெரும் பொறுப்பில் இருந்து காலஞ்சென்ற ஜோசப் இன்மர்ஸ் என்பாரின் மனைவியான காதரைன் இன்மர்ஸ் என்னும் விதவையைத் திருமணம் செய்துகொண்டார். சென்னைக் கோட்டையில் உள்ள செயின்ட் மேரீஸ் மாதா கோவிலில் முதன்முதல் நடைபெற்ற திருமணமே எல்ஹுயேல் – காதரைன் இன்மர்ஸ் ஆகியோருடையதுதான்!

அவர்களுக்குப் பிறந்த டேவிட் யேல் என்ற சிறுவன, 4 வயதில் காலமானான்; அவனுடைய சமாதி, இன்றும் சென்னை உயர் நீதிமன்ற வளைவில்—காவல் நிலையத்துக்குப் பக்கத்திலே இருக்கிறது!

பின்னாலே பெரும் பொருள் சேர்த்துக்கொண்டு இங்கிலாந்து சென்ற யேல், 1699-ல் கிழக்கிந்தியக் கம்பெனியின் கவர்னராகவே நியமனம் செய்யப்பட்டார். அதற்குப் பிறகுதான் அவர் இந்த நன்கொடை வழங்கியது.

**பல்லாயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பாலே இருந்தாலும், தமிழகத்தின் பண்புக்குச் சான்றாய -- இந்தியாவுக்கு ஒரு நல்லுறவுப் பாலமாய் அமைந்துகிடக்கிறது — யேல் பல்கலைக் கழகம் !**

**அறிஞர் அண்ணாவின் செயல் முறைகளைக் கூர்ந்து கவனித்த 'யேல்' பல்கலைக் கழக நிர்வாகிகள் ஆர அமரச் சிந்தித்த பிறகுதான், அவரைச் சிறப்பிக்க முடிவு செய்திருக்கிறார்கள் !**

**தமிழ் மண்ணின் புகழ்பரப்பும் தூதுவராய் அண்ணா அவர்கள் சென்று வரட்டும் ! குடத்துள விளக்காய் ஒளிவிட்டுக்கொண்டிருந்த அவர் புகழ், குன்றின் மேலிட்ட விளக்காய் ஒளிரட்டும் !**

# திருப்பூர் வட்டத்தில் பொதுக்கூட்டங்கள்

## திருப்பூர்

திருப்பூர் 16, 17-வது வட்ட தி. மு. க. சார்பில் 24—3—68-ல் தோழர் எம். பி. கிட்டப்பன் தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் சின்னசாமி, நடராசு, கே. எஸ். மணி எம்.சி, தி. தங்கவேலு, மணிமாறன், மு. க. பழனிசாமி, என். கந்தசாமி பி.ஏ.பி.எல்., இரா. முருகேசன், சு. துரைசாமி எம்.எல்.ஏ., க. அன்பரசு ஆகியோர் பேசினர்.

## இருகூர்

பப்படம் வட்டம் இருகூர் எம். ஜி ஆர். மன்றச்சார்பில் 25-3-68ல் பொதுக் கூட்டம் நடைபெற்றது; தோழர்கள், க. மருதாசலம், சுப்பிரமணியம், குருசாமி, சோ. கு. பழனிசாமி, தமிழரச்ன், திருப்பூர் இரா. முருகேசன், வேணு, மு. ராமநாதன் ஆகியோர் பேசினர்.

## சோமனூர்

சோமனூர் எம் ஜி.ஆர். மன்றத் துவக்க விழாப் பொதுக்கூட்டம் 27—3—68-ல், தோழர் பி. அல்போன்சு பி.ஏ.பி.எல். தலைமையில் நடைபெற்றது; தோழர்கள் சோ. கு. பழனிசாமி, மு. க. பழனிசாமி, திருப்பூர் இரா. முருகேசன், கோவை ப. கோபால், மு. இராமனுதன் ஆகியோர் பேசினர்.

## அய்யம்பாளையம்

பப்படம் வட்டம் அய்யம்பாளையம் எம். ஜி. ஆர். மன்ற முதல் ஆண்டுவிழாப் பொதுக் கூட்டம் 27—3—68-ல், தோழர் பழனிசாமி தலைமையில் நடைபெற்றது; தோழர்கள் திராவிடமணி, அன்புச்செழியன், சோ. கு. பழனிசாமி, மு. க. பழனிசாமி, இரா. முருகேசன், மு. இராமனுதன் ஆகியோர் பேசினர்.

# தமிழக ஸ்டாம்பு திருத்த மசோதா

## குடியரசுத் தலைவர் ஒப்புதல்

சென்னை, ஏப் 9—

1967-ம் ஆண்டைய இந்திய ஸ்டாம்பு (தமிழகத் திருத்த) மசோதாவுக்கு, குடியரசுத் தலைவர் ஒப்புதல் அளித்திருக்கிருர்.

ஒரு தரப்பினரிடமிருந்து மற்ருெருவர் வாங்கும் எந்தச் சொத்தின் மீதும் அதன் மார்க்கெட் மதிப்பின் அடிப்படையில் ஸ்டாம்பு தீர்வையைத் தமிழக அரசு விதிப்பதற்கு இந்த மசோதா வகை செய்கிறது.

1899-ம் ஆண்டைய இந்திய ஸ்டாம்பு சட்டத்தின்படி சொத்துக்களை மாற்றுவதற்கு வகைசெய்யும் பதிவேடுகள்மீது விதிக்கப்படும் ஸ்டாம்பு வரி, அந்தப் பதிவேட்டில் கொடுக்கப்பட்டுள்ள தொகையின் அடிப்படையில்தான் கணக்கிடப்பட்டு வந்தது. இதனுல் சொத்து மாற்றங்கள் செய்பவர்கள் அந்தப் பதிவேடுகளில், சொத்தின் மார்க்கெட் மதிப்புக்கும் குறைவான தொகைகளைக் குறிப்பிட்டு ஸ்டாம்பு வரியையும் குறைவாகவே செலுத்தி வருகிருர்கள்; வரியில் பெரும் பகுதியைச் செலுத்தாமலே தப்பிவிடுகிருர்கள்.

இத்தகைய முறையற்ற காரியங்களுக்கு மூலச் சட்டத்தில் வகைசெய்யப்பட்டுள்ள அபராதம் இந்த வரி ஏய்ப்பைக் கட்டுப்படுத்துவத்ற்குப் போதியதாக இல்லை. சொத்தைக் குறைவாக மதிப்பிடும் போக்கையும், அதையடுத்து ஸ்டாம்பு வரியைச் செலுத்தாமல் ஏமாற்றும் போக்கையும் தடுப்பதற்காக தமிழக அரசு ஒரு மசோதாவின் மூலம் இந்தச் சட்டத்தைத் திருத்துவதென்று முடிவு செய்தது.

இப்பொழுது சட்டமாகிவிட்ட இந்தத் தமிழக மசோதா, மாற்றப்படும் சொத்தின் மார்க்கெட் பெறுமானத்தை நிர்ணயிப்பதற்குத் தேவையான அமைப்புக்கு வகை செய்கிறது.

மேலும், அத்தகைய நடவடிக்கைகளில் உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டால் அதற்குமேல் அப்பீல் செய்வதற்கும் இந்த மசோதா வகைசெய்கிறது.

# 'ஜி. டி. நாயுடுவின் அறிவைப் பயன்படுத்த நாடு தவறிவிட்டது'

## 'அவர் உதவியை நாடியிருந்தால் அரசுத் திட்டங்களில் இழப்பு ஏற்பட்டிருக்காது'

## 'ஞாலம் புகழும் அவரை காலம்கடந்து புகழ்கிருேம் நாம்'

### பிறந்த நாள் விழாவில் சான்ருேர்கள் உரை

சென்னையில் நடந்த ஜி. டி. நாயுடு அவர்களின் 75-வது பிறந்த நாள் விழாவில் கலந்துகொண்ட தலைவர்கள் ஆற்றிய பாராட்டுரைகளின் சுருக்கம் வருமாறு :—

### கி. ஆ. பெ. விசுவநாதம்

முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள், அனைவரையும் வரவேற்றுப் பேசியதாவது :—

"ஜி. டி. நாயுடு அவர்களுக்கு, தமிழகத்தின் தலைநகரில் இவ்வளவு சிறப்பான விழா நடத்துவது அவருக்குப் பெருமையல்ல; தமிழ்நாட்டிற்கும் — தமிழருக்கும்—தொழில் துறைக்கும்—அறிவியல் துறைக்கும்—வேளாண்மைத் துறைக்கும் அவர் ஆற்றிய தொண்டிற்கு அளிக்கும் பெருமைதான்--நன்றிதான் இந்த விழா! அவருடைய தொண்டினை — அவருடைய ஆராய்ச்சிப் பயனை இதுவரை எந்த அரசும் மதிக்கவில்லை; ஆக்கம் தரவில்லை; இருப்பினும், மக்கள் அவருக்கு மதிப்பும் மரியாதையும் செலுத்த இந்த விழா நடக்கிறது!

இன்று இந்த விழாவில் கலந்துகொண்டு அவருக்குப் பாராட்டும் பெருமையும் அளிக்க வந்திருக்கும் அனைவருக்கும் நன்றி செலுத்துகிறேன்.

'தமிழாய்ந்த தமிழன்தான், தமிழ்நாட்டில் முதலமைச்சராக வேண்டும்' என்ற — கவிஞர் பாரதிதாசனின் கனவு பலித்து, தமிழாய்ந்த தமிழன் முதலமைச்சராகி விட்டார்; இன்றையத் தமிழக முதலமைச்சர், உலகத் தமிழ் மாநாடு நடத்தித் தமிழுக்குச் சிறப்பிடமளித்தார்; எனவே முதலமைச்சர் அவர்கள், ஜி. டி. நாயுடு அவர்களின் விஞ்ஞான அறிவைப் பயன்படுத்த வேண்டும்."

### பெரியார் ஈ. வெ. ரா.

விழாவைத் துவக்கி வைத்துப் பெரியார் அவர்கள் பேசியதாவது :—

"இன்றுதான் ஜி. டி. நாயுடு அவர்களின் பெருமையை மக்கள் உணர்ந்திருக்கிருர்கள்.

சில துரோகிகள் அவருடைய விஞ்ஞான அறிவை மறைத்து, மக்கள் அறிய முடியாதபடி செய்தார்கள்.

அவருடைய அறிவை வெளிநாட்டார் மதித்து, அவர் செய்த சாமான்களைப் பெற்று வந்தார்கள்; இந்த நாட்டில் உள்ளவர்களுக்கு அவையெல்லாம் பயன்படாமல் இருந்து வந்தன.

இப்போது அவரை மதித்துப் போற்றும் வகையில் இந்த விழாவை ஏற்பாடு செய்த கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்களைப் பாராட்டுகிறேன்.

திரு. ஜி. டி. நாயுடு போன்ற தொழிலறிஞர்களின் உதவியை நாடாமல், பட்டம் பெற்றவர்களையே வேட்டையாடிப் பிடித்து அமர்த்துவதனுல்தான் அரசின் திட்டங்கள் பல பெரும் நட்டத்துக்கு உள்ளாகின்றன!

திரு. ஜி. டி. நாயுடு அவர்கள், தமிழகத்திற்கு ஒரு நிதி போன்றவர்; அவர் பெருமை உலகெல்லாம் பரவ வேண்டும்."

### பி. டி. இராசன்

தமிழவேள் திரு. பி. டி. இராசன் அவர்கள், தமது தலைமையுரையில் குறிப்பிட்டதாவது :—

"திரு. ஜி. டி. நாயுடு அவர்களைப் பயன்படுத்திக்கொள்ள மத்திய அரசும்—மாநில அரசும் இதுவரை முன்வராவிட்டாலும், இனியேனும், தமிழக அரசு அவரைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்."

### வி. கே. ஆர். வி, ராவ்

மத்திய போக்குவரத்துறை அமைச்சர் திரு. வி. கே. ஆர். வி. ராவ் தமிழில் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"திரு. ஜி. டி. நாயுடு அவர்கள் தமிழகத்திற்கு மட்டும் உரியவரல்லர்; இந்தியா முழுமைக்குமே அவர் புகழைத் தேடித் தந்துள்ளார். அவர் இந்தியா முழுமைக்குமே சொந்தமானவர் ஆவார்!"

### ஓமந்தூரார்

முன்னுள் முதலமைச்சர் திரு. ஓமந்தூரா பி. இராமசாமி (ரெட்டியார்), ஜி. டி. நாயுடு அவர்களின் சிறப்பியல்புகளையும், அறிவாற்றலையும் பாராட்டிவிட்டுக் குறிப்பிட்டதாவது :—

"இந்த விழா, சில ஆண்டுகளுக்கு முன்பே கொண்டாடப்பட்டிருந்தால் சிறந்த பயன் ஏற்பட்டிருக்கும்."

### காமராசர்

முன்னுள் முதலமைச்சர் திரு. காமராசர் பேசியதாவது :—

"திரு. ஜி. டி. நாயுடு அவர்களின் அறிவை உலகம் முழுவதும் அறியும். 'அவருடைய அறிவைச் சரிவரப் பயன்படுத்திக் கொள்ளவில்லை' என்ற புகார் இருந்துவருகிறது; இதற்குக் காரணம், இவருடைய கருத்துக்களை மற்ற தொழில் நுட்பக்காரர்கள் ஒப்புக்கொள்ளாதது தான். இதை, 'அறிவுலக மோதல்' என்றுகூடச் சொல்லலாம்.

இவருடைய கண்டுபிடிப்புகள் நமக்குப் பயன்படாவிட்டாலும் நம் சந்ததியினருக்காவது பயன் பயன்பட வேண்டும்.

இவருடைய கண்டுபிடிப்புகளை மனித சமுதாயம் நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ளும் போது இவருடைய புகழும் மேலும் ஓங்கும்."

# நாட்டுக்கு நற்பயன்....

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

அதை, டெல்லி சரியாக மதிப்பிட்டதாகத தெரியவில்லை!

அண்ணுதுரையும், அவருடைய கட்சியினரும், உருவாகிவரும் பெரியதோர் சனநாயகச் சக்தியினர்; ஆகவே, இதுபற்றி, நட்புள்ள உலக நாடுகள் நிறையத் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதில் பிரச்சினையே இல்லை!

ஆனுலும், மேலைநாடுகளிலுள்ள இந்தியத் தூதுவரகங்களுக்கு, 'பயணம் மேற்கொள்ளும் தமிழக முதலமைச்சருக்கு இந்த அடிப்படையில் உதவ வேண்டும்' என்று தெரிவிக்கப்பட்டிருப்பதாக இதுவரையில் தகவல் இல்லை!

அமெரிக்கா, ஜப்பான் ஆகிய தொலை நாடுகளுக்கும், அருகிலுள்ள தாய்லாந்து, மலாயா ஆகிய நாடுகளுக்கும் திரு. அண்ணுதுரை செல்வது நல்லெண்ணப் பயணமாகவே இருக்கும்!

எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும், இந்த நாடு, சனநாயக மரபுகளையும் சர்வதேசச் சட்டத்தையும் பேணிக்காக்கும் என்கிற நம்பிக்கையை இந்த நாடுகள் பெறவேண்டும்.

இந்த நோக்கத்துக்காகத்தான், வெளிநாடு செல்லும் நாடாளுமன்ற நல்லெண்ணத் தூதுக் குழுக்களில் எதிர்க் கட்சி உறுப்பினர்களும் இடம் பெறுகின்றனர்!

# புயலறி கருவி நிலையம்

## சென்னையில் அமைக்கப் புதுடில்லியின் திட்டம்

புதுல்லி, ஏப். 9—

சென்னையில் புயல் ஆராய்ச்சி எச்சரிக்கை நிலைய மொன்றை அமைப்பதுபற்றி மத்திய அரசு திட்டமிட்டுவருகிறது.

இந்த நிலையத்தின்கீழ், கிழக்கு, மேற்கு கடற்கரை நெடுக 3 ராடார் சாதனங்கள் அமைக்கப்படும்.

முதலாவது ராடார் சாதனம் விரைவில் விசாகப்பட்டினத்தில் அமைக்கப்படும்; இது ஜப்பானிடமிருந்து கிடைக்கும்.

400 கிலோமீட்டர் தொலைவுக்குள் புயல் ஏற்படக்கூடியதைப் பற்றி இந்த ராடார் சாதனம் முன் கூட்டியே தெரிவிக்கும்.

புயல் தோன்றியுள்ள பகுதிகளுக்கு விமானங்களை அனுப்பி, அது எங்கெங்கு வீசக்கூடும் என்பதைப்பற்றி எச்சரிக்கை விடுக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

# 10,000 பவுன் செலவில் காந்தியார் சிலை

இலண்டனின் முக்கிய இடமான டாவிஸ்டாக் சதுக்கத்தில் காந்தியார் வெண்கலச் சிலை ஒன்று அமைக்கப்படுகிறது.

மே திங்களில், பிரிட்டிஷ் தலைமையமைச்சர் வில்சன் இந்தச் சிலையைத் திறந்துவைக்கிருர்.

10,000 பவுன் செலவில் அமைக்கப்படவிருக்கும் இந்தச் சிலைக்கு, பொதுமக்கள் அளித்த நன்கொடை தவிர, பிரிட்டிஷ் அரசு நிதியுதவி அளித்து இடமும் அளித்திருககிறது.

இந்தச் சதுக்கத்தில் சிலை அமைக்கவேண்டிய இடத்தை ஜவகர்லால் நேரு முன்பே தேர்ந்தெடுத்து, அதற்கு அடையாளமாக உலோகத்தால் ஆன 'மர'க்கிளை ஒன்றை நட்டு வைத்திருக்கிருர். இந்தக் கிளையை எடுத்துவிட்டு, அந்த இடத்தில் காந்தியார் சிலையை வைக்கவேண்டும் என்பது அப்போதைய ஏற்பாடு.

ஆனுல் இப்போது, இந்தக் கிளையை அப்படியே அங்கேயே வைத்துவிட்டு—அதன் அருகே காந்தி சிலையை அமைக்க முடிவு செய்து ஏற்பாடுகள் செய்துள்ளனர்.

காந்திஜி நினைவாகச் சிலையும், நேருஜி நினைவாக அவரே நட்டுச் சென்ற கிளையும் இருப்பதன்மூலம், இலண்டனில் ஒரே இடத்தில், இரு பெரும் இந்தியத் தலைவர்களுக்கு நினைவுச் சின்னங்கள் இருக்கும் அல்லவா?

# இந்தி வெறியரின் புதிய மிரட்டல்!

## முற்றுகை போராட்டம் துவங்குமாம்

இலட்சுமணபுரி, ஏப். 9—

இந்தி பேசும் மாநிலங்களில் இவ்வாண்டு இறுதியில் இந்தி இயக்கமொன்றைத் தாம் ஆரம்பிக்கப்போவதாக மக்களவை காங்கிரசு உறுப்பினர் சேத் கோவிந்ததாஸ் தெரிவித்துள்ளார்.

"இந்தி சேவா சங்கத்துக்கு 5 இலட்சம் தொண்டர்கள் சேர்க்கப்படுவர்" என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

"இந்த இயக்கம் அமைதியான முறையில் நடக்கும்; இவ்வாண்டு டிசம்பர் 31-ம் நாளுக்குள் அனைத்தும் இந்தி மொழிக்கு மாற்றப்படாவிட்டால் கவர்னர்கள், முதலமைச்சர்கள் துணைவேந்தர்கள் ஆகியோர் 'கேரோ' செய்யப்படுவர்; இந்தியை மேற்கொள்ளாதவர்கள் 'பகிஷ்காரம் செய்யப்படுவர்; ஏதாவது சங்கடங்கள் இருந்தால் ஆங்கில வார்த்தைகளை தேவநாகரியில் பயனபடுத்தலாம்" என்றெல்லாம் அவர் கூறியிருக்கிருர்.

# அஞ்சலுறையில் பாகிஸ்தான் விஷமம்?

**பிராங்புர்த் என்ற நகரிலிருந்து காஷ்மீரிலுள்ள ஒரு நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டுள்ள அஞ்சலுறை ஒன்றின் மீது, 'ஜம்மு--காஷ்மீர், பாகிஸ்தான்' என்று முகவரி எழுதப்பட்டுள்ளதாம்.**

**அயல் நாட்டிலுள்ளவர்களிடையே, 'காஷ்மீர், பாகிஸ்தானத்தைச் சேர்ந்தது' என்ற கருத்து பரவியிருந்தாலும், அஞ்சல் துறையிலுள்ள மேலதிகாரிகளிலிருந்து சாதாரண ஊழியர் வரையில் அத்தனைபேர்பார்வையிலிருந்தும் அது எப்படித் தப்பிவந்துள்ளது என்பதுதான் பார்வையாளர்களுக்கு வியப்பை அளித்துள்ளது!**

# மனித வர்க்கத்தின் மனச்சாட்சியைத் தட்டி எழுப்பும்

"டாக்டர் கிங்கின் மரணம் மனித வர்க்கத்தின் மனச் சாட்சியைத் தட்டி எழுப்பி, உலகம் முழுவதிலும் எல்லா பாகுபாடுகளையும் ஒழிக்க வழிகோலும்!

"நிற அடிப்படையில் பாகுபாடு காட்டுவது மிகக் கடுமையான ஒன்று; இறுதியில் அது,மற்ற நெருக்கடிகளைவிட மோசமானதாக இருக்கும்."

—ஊ-தாண்ட்

(லூதர் கிங் கொலையுண்டது பற்றி)

# பிராவிடண்ட் நிதி

## தமிழகத்தில் மேலும் விரிவு

சென்னை, ஏப் 9—

1968 சனவரித்திங்களில்,தொழிலாளர்களுக்கான பிராவிடண்ட் நிதிச் சட்டம் தமிழ்நாட்டிலும், புதுச்சேரிப் பகுதியிலும் 37 புதிய நிறுவனங்களுக்கு விரிவாக்கப்பட்டது; இதன் பயனுக, மேலும் 912 தொழிலாளர்கள் நன்மையடைகிருர்கள்.

இவர்களையும் சேர்த்து இந்த இரண்டு பகுதிகளிலும் 5,319 நிறுவனங்களைச் சேர்ந்த 4,83,114 பேர் இப்பொழுது இந்தச் சட்டத்தினுல் நன்மை பெற்றுவருகிருர்கள்.

சனவரித் திங்களில் பல்வேறு நிறுவனங்களும் மொத்தம் ரூ. 1.13 கோடி இந்த நிதிக்கு செலுத்தின. 1967 டிசம்பர் திங்களில் செலுத்தப்பட்ட தொகையைவிட இது ரூ. 12 இலட்சம் அதிகமாகும்.

# மக்களை வாடாமல் வாழ வைப்பதே அரசு நோக்கம்

## பசிப் பிணி ஒழிப்புப் பணிக்கு ஒத்துழைப்பீர்

### நகரப் பங்கீட்டு வியாபாரிகளிடையே கருணாநிதி கனிவுரை

சென்னை, ஏப். 9—

"ரேஷன் வியாபாரிகளுக்காக இந்த அமைப்பு இருக்கிறது; எதற்கும் ஓர் அமைப்பு இருக்கத்தான் வேண்டும்; ஆனால், பசிக் குரலுக்கு எதிராக அமைப்பு இருக்கக்கூடாது! 'அமைப்பு' என்று ஒன்று ஏற்படுத்துவதே, சமுதாயத்திலுள்ள பொதுப் பிரச்சினை பற்றி விவாதிப்பதற்காகத்தான்!

"தனிப்பட்ட ரேஷன் கடைக்காரர் தவறு செய்தால்--அந்தத் தவறுக்கு இந்த அரசு தண்டனை விதித்தால்---தவறு செய்தவருக்காக இந்த அமைப்பு வாதாடக் கூடாது!

"தவறு செய்தவரைக் கண்டுபிடிக்க அரசு அதிகாரிகள் தவறினாலும், அதிகாரிகள்முன்---தவறுக்குரியவரைக் கண்டுபிடித்து நிறுத்துவதாக அமைப்புக் குழு செயல்பட வேண்டும்; ரேஷன் வியாபாரிகள் சங்க மத்தியக் குழுவும் அதுபோல் செயல்படுமென்று நம்புகிறேன்.

"உங்கள் கோரிக்கைகளைக் கவனித்து எதையெதை எப்படிச் செய்ய வேண்டுமோ அதையதை அப்படிச் செய்ய இந்த அரசு ஆலோசனை செய்யும்"

என்று பொதுப் பணித்துறை அமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்கள், சென்னை ரேஷன் வியாபாரிகள் சங்க மத்தியக் குழு ஆண்டு விழாவில் பேசுகையில் கூறினார். அவர் மேலும் பேசியதாவது:—

"நீங்கள் விடுத்துள்ள கோரிக்கைகளை நிறைவேற்றுவதிலுள்ள சங்கடங்களை, நீங்களே உணருவீர்கள்; இருந்தாலும், கோரிக்கைகளை அனுதாபத்துடன் இந்த அரசு கவனிக்கும் என்பதில் உங்களுக்கு ஒரு துளியும் ஐயம் இருக்காது என்பதும் தெரியும்.

ரேஷன் வியாபாரிகளாகிய நீங்கள், சமுதாயத்திற்குத் தேவையான மிக உயர்ந்த பணியில் ஈடுபட்டிருக்கிறீர்கள். இப்பணி இலட்சோப லட்சம் மக்களின் வயிற்றுப் பாட்டைப் போக்கும் பணி!

அரசுக்காக அல்ல—சமுதாயத்திற்காக நீங்கள் தியாகம் செய்ய முன்வர வேண்டும்!

எந்த ஓர் அரசும், தனது பரிபாலனத்தில் இருக்கும் மக்களை வாடாமல் வாழவைக்கத்தான் முயலும்!

இன்று தமிழக அரசு, உணவுப் பொருளை உண்டாக்கி—அதாவது உற்பத்தி செய்து—அதைப் பெற்றுப் பாதுகாத்து கடைகளின்மூலம் பங்கிட்டுத்தர ஏற்பாடு செய்திருக்கிறது.

படி அரிசித் திட்டம் வெற்றிபெற உணவுத்துறை அமைச்சர் மதியழகன் அவர்களே காரணமாவார்.

இன்று தமிழகத்திலே ஒருசாரார், 'ரேஷன் நீடிக்கவேண்டுமா' என்று கேட்கின்றனர்; 'ரேஷன் இருப்பதால் இடைஞ்சல் இருக்கிறது; ரேஷன் இருப்பதால் இன்ன சிரமம் இருக்கிறது' என்று யாராவது சொல்வார்களானால், 'அதை எடுத்து விட்டால் இதைவிட ஆபத்து இருக்கிறது' என்பதையும் அவர்கள் உணரவேண்டும்.

ரேஷன் வியாபாரிகளின் ஒத்துழைப்பால், சென்னை, கோவை அதன் சுற்றுப்புறப் பகுதிகளில் படி அரிசித் திட்டம் வெற்றிகரமாக நடைபெறுகிறது; இது பரவலாவதற்குக் காலத் தாமதம் ஆனாலும், நிச்சயம் பரவலாக்கப்படும் என்பதையும் நீங்கள் அறிவீர்கள்.

நீங்கள் எழுப்பிய கோரிக்கைகளில், 'மேலவையில் எங்களுக்கு ஒரு பிரதிநிதி வேண்டும்' என்பதும் ஒன்று.

நான் கேட்கிறேன்—'எங்கள்மீது உங்களுக்கு நம்பிக்கை இல்லையா? உங்கள் பிரதிநிதியாக நாங்கள் இருக்க மாட்டோமா' என்று?

உங்களுக்கென ஒரு பிரதிநிதி வந்துவிட்டால், 'இப்படிப்பட்ட விழாக்களில் எங்களை அழைக்க மாட்டீர்கள்' என்ற கவலையும் எங்களுக்கு இல்லாமலில்லை; உங்கள் பிரதிநிதி இல்லாமலேயே நாங்கள் உங்களுக்காகப் பாடுபடுவோம்!"


**மண ·விழா**

அன்புடையீர், வணக்கம். 12—4—68 வெள்ளி மாலை 4-மணிக்கு

| | |
|---|---|
| எனது மருமகன் **செல்வம் பி.ஏ.** | எனது திருமகன் **முத்துவேலன்** |
| எனது திருமகள் **செல்வி** | சிதம்பரம் ஜெயராம் திருமகள் **சிவகாமிசுந்தரி** |

ஆகியோரின் திருமண விழா, தமிழக முதல்வர் **பேரறிஞர் அண்ணா** அவர்கள் தலைமையில்—சென்னை 'ஆபட்சுபரி' மண்டபத்தில் நடைபெறும்; தாங்கள் வருகை நல்கி சிறப்பூட்ட வேண்டுகிறேன்.

அன்புள்ள

**மு. கருணாநிதி**

**நிகழ்ச்சி நிரல்**

மாலை 4.00 மணி: தேநீர் விருந்து
5.00 மணி: மணவிழா
6.30 மணி: இசை—திருமதி எம். எஸ். சுப்புலட்சுமி குழுவினர்
இரவு 9.00 மணி: நடனம்—திருமதி பத்மினி குழுவினர்


# உணவுப் பிரச்சினையை வர்த்தகச் சூதாடிகளிடம் விடோம்!

## பசித்த மக்களுக்கு உணவளிக்கும் பொறுப்பு மகத்தானது

### பங்கீட்டு வியாபாரிகளிடையே அமைச்சர் மதியழகன் விளக்கம்

சென்னை, ஏப். 9—

"ஏழை-எளிய பாட்டாளி மக்களால் மலர்ந்த அரசு தி.மு. கழக அரசு! நான்கு கோடி மக்களின் நம்பிக்கையைப் பெற்றுவந்த அரசு இது! எனவே, இந்த நாட்டினுடைய உணவுப் பிரச்சினையை வர்த்தகச் சூதாடிகளிடத்தில் ஒருநாளும் விட்டுவிட மாட்டோம்!

"உங்கள் கோரிக்கைகளில் 'தக்கது இன்னது; தகாதது இன்னது' என்று கவனித்து அதற்குமேல் அரசு ஆலோசனை செய்யும்"

என்று உணவு அமைச்சர் திரு. கே.ஏ. மதியழகன், சென்னை நகரப் பங்கீட்டு வியாபாரிகளிடை பேசுகையில் தெரிவித்தார். அவர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"சென்னை நகரிலுள்ள 20 இலட்சம் மக்களுக்கு உணவு வழங்கும் புனிதத் தொழிலில் சென்னை நகர ரேஷன் கடைக்காரர்களாகிய நீங்கள் ஈடுபட்டுள்ளீர்கள்; அரசாங்கத்திற்கும் உங்களுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு.

சென்னை நகர ரேஷன் வியாபாரிகள்மீது அரசுக்கும் குறை இல்லை — மக்களுக்கும் குறை இல்லை!

'மூட்டை ஒன்றுக்கு 2 கிலோ 1 கிலோ அரிசி குறைந்தாலும், ரேஷன் கடை வியாபாரிகளைத் தொந்தரவு செய்யக்கூடாது' என்று அதிகாரிகளிடம் ஒரு மாதத்திற்கு முன்பே சொல்லியிருக்கிறோம்!

உணவு வழங்குத்துறைதான் அரசாங்கத்துறைகளிலே முக்கியமான துறையாகும். சிலர் சொல்லுவதுபோல், ரேஷன் கட்டுப்பாட்டை விட்டுவிட்டால், மக்களிடம் எதற்காக ஓட்டுப் பெற்று ஆட்சிக்கு வந்தோமோ, அந்தக் காரியம் நிறைவேறாமல் போய்விடும்!

நாங்கள் கேட்கின்ற கமிஷனைக் கொடுங்கள் — இல்லையென்றால் கட்டுப்பாட்டை நீக்கிவிடுங்கள்' என்பது முறையானதல்ல!

நான் டில்லிக்கு முதலமைச்சர் மாநாட்டில் கலந்துகொள்ளச் சென்றபோது, தனி உணவு மண்டலத்தைத் தென் உணவு மண்டலமாக மாற்ற வேண்டும் என்ற பிரச்சினையைக் கொண்டு வந்தார்கள்; எல்லோருக்கும் சாப்பாடு போட வேண்டிய பொறுப்பு அரசுக்கு இருக்கிறது; பாலங்கள் கட்டுவது—பள்ளிகள் அமைப்பது ஒருபுறம் இருந்தாலும், பசிக்கும் மக்களுக்கு உணவு வழங்கும் பொறுப்புத்தான் 'அரசுக்கு அடிப்படையான பொறுப்பு' என்று அங்கே கூறினேன்; அதையே இப்பொழுதும் திரும்பக் கூறுகிறேன்."

## இந்தி மாநிலத்தில் : அதிசயம்!

மத்தியப் பிரதேசம், உத்தரப் பிரதேசம் இரண்டும் இந்தி பேசும் மாநிலங்கள்; இந்த இரண்டு மாநிலங்களிடையே செல்லும் பேருந்துகளில் நிலவும் ஒழுங்கீனங்களைப் பற்றி இந்தியில் ஒரு முறையீட்டை எழுதி, அதைச் சில பயணிகள் மத்தியப் பிரதேசப் போக்குவரத்து அதிகாரிகளிடம் கொடுத்தார்களாம்; அதை அவர், அவர்கள் முன்னிலையிலேயே கிழித்தெறிந்து விட்டு, 'முறையீட்டை ஆங்கிலத்தில் எழுதிக் கொடுங்கள்; அப்பொழுதுதான் கவனிக்க முடியும்' என்று கூறி விட்டாராம்!

## பொது இன்சூரன்சு அரசுடைமையாகுமா?

### ரூ. 30 கோடி இழப்பீடு தரவேண்டுமாம்

புதுடில்லி, ஏப். 9—

நாட்டில் உள்ள பொது இன்சூரன்சு தொழில் முழுவதையும் அரசு எடுத்துக்கொள்வதாயிருந்தால், இழப்பீடு கொடுப்பதற்காக மத்திய அரசுக்கு ரூ. 30 கோடி செலவாகுமாம்.

நாடாளுமன்றத்தில் பொது இன்சூரன்சுத் தொழிலைச் சமுதாய ஆதிக்கத்துக்கு உட்படுத்துவதற்கான மசோதா தாக்கல் செய்யப்பட்டது; அத்துடன் இணைக்கப்பட்ட நிதி அறிக்கையில் இந்த விவரம் அடங்கியுள்ளது.

சில சந்தர்ப்பங்களில் இழப்பீடு கொடுத்து ஓர் இன்சூரன்சுக் கம்பெனியை மேற்கொள்ள மத்திய அரசுக்கு இந்த மசோதா அதிகாரம் தருகிறது; ஆனால் இந்த மசோதாவின் விதி, கட்டளைத் தன்மை வாய்ந்ததல்ல!

## நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

**11--4--68**

முருநெல்லிக்கோட்டை

தி. மு. க. சார்பில் மாலை 7-மணிக்கு; தலைவர்: அ. பொம்மையா; பேசுவோர்: ஆ. திராவிடமணி, ப. முத்துசாமி பி ஏ. பி.எல்., வி. நாகசுந்தரம், இரா. க. பரமன், தி. கா. முத்து, இரா. அய்யாவு, மா. சின்னக்காளை.

## புதுவை அரசின்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காலம் தேவை" என்று, நிதியமைச்சர் காங்கேயன் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

'நிலையான அரசினாலேயே மக்களுக்கு நன்மை செய்யமுடியும்' என்றும், 'கூட்டமைச்சரவையால் நிலையாக இருக்கமுடியாது' என்றும் அவர் கூறினார்.

நிதி ஒதுக்கீட்டு மசோதா வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது, எதிர்க் கட்சியினர் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை; எனவே காங்கிரசார் மட்டுமே வாக்களித்து, மசோதாவை நிறைவேற்றினர்.

நகராட்சிகள் சட்டத் திருத்த மசோதா வாக்கெடுப்புக்கு வந்த நேரத்தில், எதிர்க் கட்சியினர் அனைவரும் வெளிநடப்புச் செய்தனர். அதுவும் காங்கிரசார் வாக்குகளை மட்டுமே பெற்று நிறைவேறியது.

இந்த மசோதாவைத் தாக்கல் செய்தபோது, திரு. சுப்பையா எதிர்ப்புத் தெரிவித்தார்; 'ஏற்கனவே இதே போன்றதொரு மசோதாவின் நகல் எல்லா உறுப்பினர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது; அதைத் திரும்பப் பெற அனுமதியளிக்காததற்கு முன்பே வேறொரு புதிய மசோதாவைக் கொண்டுவரலாமா' என்று அவர் கேட்டார்.

"முந்திய மசோதா எல்லோருக்கும் அனுப்பப்பட்டிருந்தபோதிலும், அது அவையில் தாக்கல் செய்யப்படவில்லை" என்று அவைத் தலைவர் விளக்கமளித்தார்.

நகராட்சிக் கமிஷன்களை ஆறு மாத காலத்திற்கு நீடிக்க, அவையின் அனுமதி கோரப்பட்டது.

'நகராட்சித் தேர்தலை உடனடியாக நடத்த அரசு முன்வந்தால், இந்த மசோதாவுக்குத் தேவையே இல்லை' என்றார் திரு. சுப்பையா.

முன்னாள் முதலமைச்சரான திரு. பரூக மரைக்காயர் பேசுகையில், 'நகராட்சித் தேர்தல்களைத் தள்ளிப்போடுவது சனநாயக விரோதச் செயல்' என்றார்.

எதிர்க் கட்சித் தலைவர் திரு. ஈ. குபேர் பேசுகையில், 'இப்படி விருப்பம்போல் நகராட்சித் தேர்தலைத் தள்ளிப்போடுவது சனநாயக மரபைக் காக்கவும் சட்டத்தை மதித்துச் செயல்படவும் துணைபுரியாது' என்றார்.

'இந்தியாவுடன் புதுவை இணைவதற்கு முன்பிருந்த அரசில் பணியாற்றிய 1,500 ஊழியர்களுக்கும், மத்திய அரசின் பஞ்சப் படியின் பயனை விரிவுபடுத்த வேண்டும்' என்று திரு. குருசாமி ஒரு தீர்மானம் கொண்டுவந்தார்.

### பாரதிதாசன் அஞ்சல் தலை

திரு. இரங்கநாதன் மூன்று தீர்மானங்களைக் கொண்டு வந்தார்; அவற்றில் ஒன்று—'பேட்டண்ட்' மற்றும் மகிமை வரிகள் பற்றியது; மற்றொன்று—பிரெஞ்சு இராணுவப் பென்ஷன் பெறுவோருக்கு வருமான வரியிலிருந்து விதிவிலக்கு அளிப்பது பற்றியதாகும்; இன்னொன்று—'புதுவை சட்டமன்ற உறுப்பினராக இருந்த புரட்சிக் கவிஞர் பாரதிதாசனைப் பெருமைப்படுத்தும் வகையில் அவருடைய உருவம் பொறித்த அஞ்சல் வில்லைகளை வெளியிடுமாறு மத்திய அரசைக் கேட்டுக் கொள்வதாகும்.'

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரத்தையும், அரசாங்க இயந்திரத்தையும் பரந்த அளவில் பயன்படுத்தியும்கூட, எதிர்க் கட்சியினர் பெரும் அளவில் வெற்றி பெற்றிருக்கிறார்கள் என்பது குறிப்பிடத் தக்கதாகும்."

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13.) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.